DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No.13 /2017

Deposition of witness for: PW - 1

Name : Chinnaadaikkan Father/Husband Name: Chinnaadaikan

Village : Taluk :

Caste : Calling :

Religion : Age :

Date : 21.12.2020

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2020.

முதல் விசாரணை:

நான் அரிட்டாபட்டியில் வசிக்கிறேன். விவசாயவேலை செய்கிறேன். இந்த வழக்கில் இறந்துபோன விஜய்முருகன் என்பவர் என் மகனாவார். எதிரி ரவிச்சந்திரனை காவல் நிலையத்தில் வைத்து பார்த்திருக்கிறேன். கடந்த 11.07.15ம் தேதி சுமார் 7 மணிக்குமேல் ஒரு போன் வந்தது, அதில் பேசிய நபர் சேதுராயன் என்பவர் வெள்ளரிப்பட்டியிலிருந்து அரிட்டாபட்டி செல்லும் சாலையில் வேகமாக சென்ற கம்பெனியை சேர்ந்த 407 வேன் ஒன்று தம்பியை இடித்துவிட்டு வேகமாக சென்றுவிட்டது என்றும், காயம்பட்ட உங்கள் மகனை மதுரை பெரியாஸ்பத்திரிக்கு கொண்டுபோகிறோம் என்றும் கூறினார். அதன்பேரில் நான் மதுரை பெரியாஸ்பத்திரி சென்று பார்த்தபோது என் மகன் தலையில் அடிபட்டு காதில் இரத்தம் வந்திருந்த நிலையில் இறந்திருந்தார். என் மகன் வெள்ளரிப்பட்டிக்கு அவரது இருசக்கர வாகனமான டி.என்.59 எஇசட், 9534 என்ற இருசக்கர வாகனத்தில் அரிட்டாபட்டிக்கு திரும்பி வந்துகொண்டிருந்தபோது சம்பவம் நடந்தது. சம்பவம் நடந்த அன்று இரவு பையன்கள் சிலர் விபத்து ஏற்படுத்திய 407 வாகனத்தின் பதிவு எண்ணை எழுதிக்கொண்டு வந்து என்னிடம் கொடுத்தனர். அதை மறுநாள் காலை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தபோது போலீசாரிடம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான், அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகாரை நான் சொல்ல சொல்ல காவல் நிலையத்தில் எழுதி படித்து காண்பித்தார்கள். அந்த புகார் அ.சா.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் போன்வழியாக கிடைத்த தகவலின்படிதான் நான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். சம்பவத்திற்கும் எதிரிக்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இறந்துபோன நபர் எந்த வாகனத்தில் மோதினார் என்றோ அல்லது தானாக சென்று கீழே விழுந்து இறந்தரா என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. அந்த புகாரினை சேகரிப்பதற்காகத்தான் ஒருநாள் கழித்து புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No.13 /2017

Deposition of witness for: PW - 2

Name : Senthilkumar Father/Husband Name: Valanadu

Village : Taluk :

Caste : Calling :

Religion : Age :

Date : 21.12.2020

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2020.

முதல் விசாரணை:

நான் அரிட்டாபட்டியில் வசிக்கிறேன். கார் ஓட்டுநராக வேலை செய்கிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். 12.07.15ம் தேதி காலை 9 மணியளவில் அரிட்டாபட்டி - நரசிங்கம்பட்டி சாலையில் நத்தம் கரட்டு வழியில் நானும் பெரியகருப்பன் மற்றும் சிலர் இருந்தபோது காவல் ஆய்வாளர் சம்பவ இடத்தில் விசாரித்து எழுதி என்னிடம் படித்து காண்பிது கையெழுத்து கேட்டதன்பேரில் நான் கையெழுத்து செய்தேன். அதில் அங்கிருந்த மரங்கள் போன்றவைகளை எழுதினார்கள் சரியாக ஞாபகமில்லை. பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆகும். போலீசார் விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

போலீஸ் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதால் நான் கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் வண்டி கீழே விழுந்த தடயங்கள், இரத்தக்கரை, வண்டியின் உடைந்த பாகங்கள் எதுவும் கைப்பற்றினார்களா என்றால் நினைவில் இல்லை. மேலூர் காவல் நிலையத்தில் வைத்து என்னிடம் கையெழுத்து வாங்கினார்களா என்றால் சம்பவம் இடத்தில் மட்டும்தான் கையெழுத்து வாங்கினார்கள்.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No.13 /2017

Deposition of witness for: PW - 3

| | | | |
|---|---|---|---|
| Name | : Logu | Father/Husband Name: Ponnuchamy | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 21.12.2020 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2020.

முதல் விசாரணை:

நான் அரிட்டாபட்டியில் வசிக்கிறேன். பூமார்க்கெட்டில் பூ கடை நடத்தி வருகிறேன். அ.சா.1 என் மாமா. இந்த வழக்கில் இறந்துபோன விஜய்முருகன் என் மாமா மகன். இவ்வழக்கில் விபத்து ஏற்படுத்திய வேனை மட்டும் அரிட்டாபட்டியிலுள்ள டி.வி.எஸ். கம்பெணியில் வைத்து பார்த்தேன். அந்த வண்டியில் முகப்பு விலக்கு மற்றும் டயரில் இரத்தம் ஒட்டியிருந்தது. வண்டி முன்ப்க்கம் வலதுபுறம் நெலிந்திருந்தது. வண்டியின் நம்பர் சரியாக நினைவில் இல்லை, கடைசி எண்கள் 0619 என்று மட்டும் நினைவில் உள்ளது. 11.07.15ம் தேதி மாலை சுமார் 7 மணியளவில் அரிட்டாபட்டியிலிருந்து வெளியில் கரடு என்ற பகுதியில் இருசக்கர வாகனத்தில் விஜய்முருகன் சென்றுகொண்டிருந்தபோது 407 வேன் மோதி விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டு சம்பவ இடம் சென்று பார்த்தபோது விஜய்முருகன் வாகனத்தோடு கீழே விழுந்து கிடந்தார். அவருக்கு பின்பக்க தலையில் இரத்த காயம் இருந்தது. சேர் ஆட்டோ மாதிரி வெள்ளைகலரில் உள்ள ஒரு வண்டியில் நானும் சிலரும் ஏற்றி மதுரை மீனாட்சி மிசன் மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு அவரது நாடியை பார்த்துவிட்டு அரசு மருத்துவமனைக்கு கொண்டுசெல்லுமாறு அனுப்பிவிட்டார்கள். மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தோம். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

சம்பவம் நடந்தது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சம்பவத்தை பார்க்கவில்லை, ஆனால் விபத்து என்று தெரியும். வேனை டி.வி.எஸ். கம்பெணி சென்று பார்த்தோமா அல்லது காவல் நிலையத்தில் பார்த்தோமா என்றால் டி.வி.எஸ். கம்பெணியில் வைத்து பார்த்தோம். டி. வி. எஸ் கம்பெணி எந்த ஊரில் உள்ளது என்றால் அரிட்டாபட்டியில் உள்ளது. போலீசார் வாகனத்தை புகைப்படம் எடுத்தனரா என்றால் நான் இருக்கும்போது எடுக்கவில்லை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No.13 /2017

Deposition of witness for: PW - 4

Name : Rajan Father/Husband Name: Chinnaadaikkan

Village : Taluk :

Caste : Calling :

Religion : Age :

Date : 21.12.2020

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2020.

முதல் விசாரணை:

நான் அரிட்டாபட்டியில் வசிக்கிறேன். சென்ட்ரிங்வேலை செய்கிறேன். விஜய்முருகனை தெரியும். அ.சா.1ஐ தெரியும், வழக்கின் எதிரியை காவல் நிலையத்தில் வைத்துதான் நான் பார்த்தேன். 11.07.15ம் தேதி மாலை 7 மணிக்கு கரடுமேடு நத்தம் வளைவில் இருசக்கர வாகனத்தில் விஜய்முருகன் சென்றுகொண்டிருந்தபோது 407 வேன் மோதி விபத்து ஏற்பட்டதாக எங்கள் ஊரில் வந்து சொன்னார்கள். பிறகு நாங்கள் சம்பவம் சென்று பார்த்தோம். அங்கு விஜய்முருகன் மயங்கிய நிலையில் கீழே கிடந்தார், அவரது இருசக்கர வாகனம் சற்று தள்ளி ஒதுங்கி கிடந்தது. பிறகு அந்த வழியாக வந்த டாடா மேஜிக் என்ற வாகனத்தில் ஏற்றி மீனாட்சி மிசன் மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அவர்கள் நாடி துடிப்பு இல்லை என்று கூறி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அதன்பேரில் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் கொண்டுபோய் சேர்த்தோம். அங்கு மருத்துவர் அவர் இறந்துவிட்டதாக சொன்னார். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான்.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No.13 /2017

Deposition of witness for: PW - 5

| | | | |
|---|---|---|---|
| Name | : Subitha | Father/Husband Name: Kathiravan | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 21.12.2020 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2020.

முதல் விசாரணை:

நான் வெள்ளரிப்பட்டியில் வசிக்கிறேன். டி.வி.எஸ் கம்பெனியில் வேலை செய்கிறேன். அ.சா.1 என் அப்பா. இறந்துபோன விஜய்முருகன் என் தம்பி. கடந்த 11.07.15ம் தேதி மாலை 7 முதல் 7.30 மணியளவில் அரிட்டாபட்டியிலிருந்து நரசிங்கம்பட்டி செல்லும் வழியில் நத்தம் கரட்டு வளைவில் இருசக்கர வாகனத்தில் என் தம்பி சென்றபோது 407 வேன் மோதி விபத்து ஏற்பட்டதாக என் அப்பா சொன்ன தகவலை கேட்டு மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனை சென்று பார்த்தேன். அங்கு என் தம்பி இறந்துவிட்டதாக கூறினார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

விபத்துபற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No.13 /2017

Deposition of witness for: PW - 6

Name : Sharmila Father/Husband Name: Suresh

Village : Taluk :

Caste : Calling :

Religion : Age :

Date : 21.12.2020

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2020.

முதல் விசாரணை:

நான் அரிட்டாபட்டியில் வசிக்கிறேன். ஹீரோ ஷோரூமில் வேலை செய்கிறேன். அ.சா.1 என் அப்பா. இறந்துபோன விஜய்முருகன் என் தம்பி. கடந்த 11.07.15ம் தேதி மாலை 7 மணியளவில் அரிட்டாபட்டியிலிருந்து நரசிங்கம்பட்டி செல்லும் வழியில் நத்தம் கரட்டு வளைவில் இருசக்கர வாகனத்தில் என் தம்பி சென்றபோது 407 வேன் மோதி விபத்து ஏற்பட்டதாக என் அப்பாவிற்கு தகவல் வந்ததன்பேரில் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனை சென்று பார்த்தேன். அங்கு என் தம்பி இறந்துவிட்டதாக கூறினார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

விபத்துபற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.